# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**


**<u>ஆணை நாள்: 04.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

..............

**<u>வழக்கு எண்.NC855/F/2024 (SA14408/F/2023)</u>**

Dr.S. முஹம்மது அப்சல் .. மனுதாரர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்/
வக்ஃபு கண்காணிப்பாளர்
எண்.51/80, காதர் அவுலியா தர்கா மற்றும் பள்ளிவாசல், (கேஏபி வளாகம்), குலவணிகர்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>ஆணை</u>**

மேற்குறிப்பிட்ட வழக்கு ஏற்கனவே 19.09.2024 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை இரு வார காலத்திற்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. மேலும், மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் இருந்த அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் / வக்ஃப் ஆய்வாளர், எண்.51/80, காதர் அவுலியா தர்கா மற்றும் பள்ளிவாசல், (கேஏபி வளாகம்), குலவணிகர்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி திரு. சையது நூர் அலம் இப்ராஹிம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை 22.10.2024 நாளன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் ஆணையை நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்து, 26.11.2024 நாளிட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று

காணொளிக் காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் Dr.S.முஹம்மது அப்சல் அவர்கள் காணொளி காட்சி மூலம் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி. J. செய்யதுஅலி பாத்திமா, பொதுத் தகவல் அலுவலர் / வக்ஃப் ஆய்வாளர், எண்.51/80, காதர் அவுலியா தர்கா மற்றும் பள்ளிவாசல், (கேஏபி வளாகம்), குலவணிகர்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 22.02.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில்,

- How many muslim Jamaaths are there in Thittuvilai, Bhoothapandy town panchayat, Thovalai Taluk, Kanyakumari District.
- Which are the muslim Jamaaths in Thittuvilai, Bhoothapandy town panchayat, Thovalai Taluk, Kanyakumari District which are registered with the Tamilnadu Waqf Board, Chennai and are goverened by the Waqf board.
- How many masjids/ masjids under construction, are there in the Bhoothapandy Town Panchayat. Are they registered under the Tamilnadu Waqf Board?

தொடர்பான தகவல்களை 3 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர்/ உதவி செயலாளர் - II, தமிழ்நாடு வக்பு வாரியம், சென்னை அவர்கள் 02.03.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக மாவட்ட பொதுத் தகவல் அலுவலர் / வக்பு ஆய்வாளர், திருநெல்வேலி அவர்களை தகவல் வழங்குமாறு தெரிவித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் / வக்பு ஆய்வாளர், திருநெல்வேலி தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர், 05.06.2023 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் 23.06.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக மாவட்ட பொதுத் தகவல் அலுவலர் / வக்பு ஆய்வாளர், திருநெல்வேலி அவர்களை தகவல் வழங்குமாறு தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர், 07.08.2023 இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தில் வைத்து காணொளிக் காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 23.05.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். பொதுத் தகவல் அலுவலர் தான் மார்ச் 2025இல் பொதுத் தகவல் அலுவலராக பணியில் சேர்ந்துள்ள காரணத்தால், தான் வந்த பிறகே மனுதாரர் கோரிய தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க விரிவான மற்றும் முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனக்கு 23.05.2025 நாளிட்டு வழங்கிய தகவல்கள் திருப்திகரமாக இல்லாத காரணத்தால், இதுநாள் வரை தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து இனங்களுக்கான விரிவான மற்றும் முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு 23.05.2025 நாளிட்டு வழங்கிய தகவல்கள் முழுமையான தகவல்கள் என ஆணையம் கருதுகிறது. இன்றைய விசாரணையில் மனுதாரர் விரிவான மற்றும் முழுமையான தகவல்களை கோரியுள்ளதால், ஆணையம் அதனை ஏற்று, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான விரிவான மற்றும் முழுமையான தகவல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் ஆணை நிறைவேற்றப்படாமை மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். .NC855/F/2024 (SA14408/F/2023)**

**பொது அதிகார அமைப்பு**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்/ வக்ஃபு கண்காணிப்பாளர்,
எண்.51/80, காதர் அவுலியா தர்கா மற்றும்
பள்ளிவாசல், (கேஏபி வளாகம்),
குலவணிகர்புரம், பாளையங்கோட்டை,
திருநெல்வேலி - 627 002.

**மனுதாரர்**

Dr. S.Muhammed Afzal,
Big Street, Thittuvilai,
Bhoothapandy post.
Kanniyakumari District - 629852

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025